முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி கார்த்திகை மாதம் 23ம் திகதி முதல் மார்கழி மாதம் 1ம் திகதி வரை**

**டிசம்பர் 9ம் திகதி முதல் டிசம்பர் 16ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. **கருணையும் அருட்தயவும்**
   **கண்ணியமான மரபு கொண்ட தமிழகமே**
   **பெருமையும் பேருலகுக்குள் சமத்துவமும்**
   **பெருந்தலைமைகள் கண்ட பரதமே**
2. **பாரதம் தமிழகம் தன்னில்**
   **பாடிடுவேன் விளம்பி தேள் திங்கள் மூவேழீர் திகதி மேல்**
   **கூறவே சாப திங்கள் ஏகதிகதி வரை**
   **(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 23ம் நாள் 09.12.2018, ஞாயிறு முதல் மார்கழி மாதம் 1ம் நாள் 16.12.2018, ஞாயிறு முடிய)**
   **குறிப்பாக நடக்கும் நிகழ்வாக எதிர்கால பலனை**
3. **பலனை சுப்பிரமணியர் யானும்**
   **பாடிடுவேன் வார ஆசியாக**
   **சலனமுற தமிழக தென்பகுதி**
   **சாற்றிட இயற்கை பேரிடரால்**
4. **பேரிடரால் வந்த அல்லல்கள்**
   **பிரச்சனையாக மக்களுக்கு தொடரும்**
   **பேரிடரை ஆளுமை சக்திகள்**
   **பொருட்படுத்தா அலட்சியம் கொண்டால்**
5. **கொண்டாலே தரும பலமிழந்திட நேரும்**
   **குறிப்பாக மத்தியும் உதவிடா**
   **உண்டான பேரிடர் தொகை ஈயா**
   **உரைத்திடுவேன் அசட்டை செய்தால்**
6. **செய்திட ஆளுமை திடமிழந்தும்**
   **செயலிழந்தும் பரதமே முடை**
   **அய்யமற பொருளாதார வழி காண நேரும்**
   **அயல் தேசங்கள் ஆதரவும் இழக்க நேரும்**
7. **நேருமை மிக்க இந்திய பலமான**
   **நிலவுரிமை கொண்ட கழனி மக்கள்**
   **வறுமை போக்கா விட்டாலும்**
   **வல்லமைபட போராடும் உரிமைக்கு**
8. **உரிமைக்கு மதிப்பளிக்கா விட்டாலும்**
   **உயர்வின்றி பரதம் தமிழகம்**
   **நெறிகெட்டு வளர்ச்சி காணா முடை**
   **நெருக்கடிகள் கூடி தவிக்க நேரும்**

9. நேருமைபட ஆளுமை மாந்தர்கள்
நீதி காக்க நிலவுலகை மீட்க
வறுமை கண்ட கழனி மக்களை காக்க
வாஞ்சையுடன் இறங்கி வருதலுற

10. வருவதுடன் உண்மை சேவை ஆற்றிட
வளரும் மலரும் இந்தியா தமிழகம்
மாறுதல் கண்ட பேரிடர் பகுதிகளை
மக்களே இணைந்து மீட்கும் நிலை உருவாகும்

11. ஆகவே ஜீவதயவு பெருகிட
ஆற்றல்பட மக்களும் மன்னர்களும்
யுகமாற்ற வழிகளுக்கு வருக
உயர் ஆசான் அரங்கன் திருவடி

12. திருவடி பணிந்து வணங்கிவர
தெய்வீகம்பட தருமபலம் பெருக்கிட
குருவரங்கன் சேவை வழி மாற்றமும்
குவலயமே பாதுகாப்பும் வளமும் பெறும் வார ஆசி நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 23ம் நாள் 09.12.2018, ஞாயிறு முதல் மார்கழி மாதம் 1ம் நாள் 16.12.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார கால நிகழ்வுகள்**

கருணையும் அருட்பெரும் தயவும் கண்ணியமும் மிக்க பாரம்பரிய மரபும் உடைய தமிழக தேசத்திலும் எண்ணற்ற பெருமையும், இப்பெரும் புவியில் சமத்துவம்மிக்க தேசமாக உடையதும் பல நல்ல தலைவர்களால் ஆட்சி செய்யப்பட்டு மக்கள் மகிழ்வுடன் வாழ்ந்திட்ட பாரத தேசத்திலும் விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 23ம் நாள் 09.12.2018, ஞாயிறு முதல் மார்கழி மாதம் 1ம் நாள் 16.12.2018 ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

தமிழகத்தில் வந்திட்ட இயற்கை பேரிடர்களால் ஏற்பட்ட இழப்புகளும் துன்பங்களும் பிரச்சனைகளாக ஆகி தீராமல் மக்களுக்கு தொடர்ந்து துன்பத்தையே தருவதாக அமைந்திடும். மக்களுக்கு உண்டான பேரிடரின் துன்பங்களை ஆள்பவர்கள் மனிதாபிமானத்துடன் ஜீவதயவுடனும் நடந்து உதவிகளை விரைந்து செய்திட வேண்டும். அவ்வாறு இல்லாமல் அலட்சியமாக நடந்து கொண்டால் அரசு தருமத்தின் பலனை இழந்திட நேரும்.

குறிப்பாக மாநிலத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்யும் வகையில் மத்திய அரசும் இழப்பீடுகளை தேவையான அளவு தமிழகத்திற்கு மனிதாபிமான அடிப்படையில் விரைந்து உதவிகளையும் பொருளையும் தந்திட வேண்டும். அவ்வாறு இல்லாமல் அசட்டை செய்திட்டால் மத்திய அரசின் ஆட்சியானது வலுவிழக்கும். அரசின் செயல்பாடுகள் குறைவுபட நடந்திடும். பாரத தேசம் முழுதும் பொருளாதாரத்தில் தேக்கம் காண நேரிடும். அயல்நாடுகளின் உதவிகளை பெறுகின்றதிலும் அயல்தேச ஆதரவுகளையும் இழக்க நேரிடும்.

நேர்மைமிக்க இந்தியாவின் முதுகெலும்பாக விளங்கி இந்தியாவின் பலமாக கருதப்படும். இந்தியாவின் விவசாயிகளின் துன்பங்களையும் வறுமையையும் ஆட்சிப் பொறுப்பில் உள்ளோர் ஜீவதயவுடன் நடந்து போக்கிட வேண்டும். அவ்வாறு விவசாய மக்களின் வறுமை நிலையை மத்திய அரசு கண்டும் காணாமல் இருந்துவிட்டால் விவசாய பெருமக்கள் உரிமைக்காக பலமாக போராடுவார்கள். அவர்களது உரிமைக்கு அரசு மதிப்பளிக்காவிட்டால் பாரததேசமும் தமிழகமும் தமது நெறிகெட்டு வளர்ச்சியடையாமல் தடைகளை சந்திக்க நேர்ந்திடும். அரசிற்கு பலமான நெருக்கடிகள் அதிகமாகி தவித்திட நேர்ந்திடும்.

ஆட்சி பொறுப்பில் உள்ளவர்கள் நாட்டின் நீதியை காத்து இத்தேசத்தை வறுமை மற்றும் பிரச்சனைகளில் இருந்து மீட்டிட வறுமையுற்ற விவசாய மக்களை அவர்களது துன்பங்களில் இருந்து மீட்டிட அரசும் விவசாய மக்கள் மேல் பற்றுதலும் கருணையும் கொண்டு இறங்கி வர வேண்டும். விவசாய மக்களுக்கு தேவையான வசதிகளை வாழ்வாதாரங்களை விரைந்து தொண்டாக எண்ணி உடன் செய்து தர வேண்டும்.

இவ்விதம் ஆட்சி புரிவோர் சேவை மனப்பான்மையுடன் விவசாய பெருங்குடி மக்களை காத்திட்டால் இந்தியாவும் புதிய வலுவினை பெற்று வளர்ச்சிகளையும் நல்ல மலர்ச்சிகளையும் விரைந்து காணும். இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரசும் மக்களும் இணைந்து விரைந்து மீட்கும் நல்ல சூழ்நிலை உருவாகும்.

எனவே மக்களைக் காத்திட மக்களிடத்தும் மக்களை ஆட்சி செய்யும் ஆட்சியாளர்களிடத்தும் அவசியம் ஜீவதயவு பெருகிட வேண்டும். மக்களிடத்தும் ஆட்சியாளர்களிடத்தும் ஜீவதயவு பெருகிடவும் ஞானம்மிக்க யுகமாற்ற வழிகளுக்கு வந்திட வேண்டும். யுகமாற்றம் செய்கின்ற உயர் ஆசான் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடிகளை பணிந்து வணங்கி வர, தெய்வீக நிலை நாட்டில் பெருகிடவும் தருமபலம்தனை பெருக்கிடவும் மக்கள் செய்திட குரு அரங்கனின் தொண்டுகள் மூலமாக இவ்வுலகம் நல்ல மாற்றங்களை பெற்று இவ்வுலகமே பாதுகாப்புமிக்க உலகமாக சகல வளங்களையும் பெற்று சிறப்படையும் என தமது வார ஆசி நூல் மூலம் உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–